Fair Work
Commission

# Fair Work Commission

நாங்கள் ஆஸ்திரேலியாவின் சுதந்திரமான பணியிட உறவுகள் தீர்ப்பாயம். வேலையில் உள்ள தகராறுகளைத் தீர்க்க ஊழியர்களுக்கும் வேலைதருநர்களுக்கும் நாங்கள் உதவுகிறோம். இதில் பின்வருவன அடங்கும்:



நியாயமற்ற நீக்கம்



அடாவடித்தனம் செய்தல்



பாலியல் துன்புறுத்தல்



பாகுபாடு



வேலை இடத்தில் உரிமைத் தகராறுகள்

பின்வருவனவற்றையும் செய்கிறோம்:

- தேசிய குறைந்தபட்ச ஊதியம் என்ன என்பதை முடிவு செய்தல்
- சில தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச வேலை நிலைமைகளை அமைத்தல்
- நிறுவன ஒப்பந்தங்களை அங்கீகரித்தல்
- தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளி நிறுவனங்கள் போன்ற பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல்.

பணியாளர்களுக்கும் வேலைதருநர்களுக்கும் எளிமையான, நியாயமான மற்றும் நெகிழ்வான பணியிட உறவுகளை ஆதரிப்பதே எங்கள் வேலை.

ஊதியம், விடுப்பு மற்றும் பிற உரிமைகள் பற்றிய தகவலுக்கு, www.fairwork.gov.au இல் உள்ள Fair Work Ombudsman இணையதளத்தைப் பாருங்கள்.

Fair Work Commission

## பணியிடச் சிக்கல்களைத் தீர்த்தல்

பணியிடச் சிக்கலைத் தீர்க்க எங்களிடம் கேட்கும் போது, சட்டம் சார்ந்த செயல்முறையைத் தொடங்குவீர்கள்.

சிக்கலை விளக்கும் படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும். எங்கள் இணையதளத்தில் 'Apply or Lodge' செல்லவும். உங்கள் படிவத்தை சம்பந்தப்பட்ட மற்ற நபருடன் பகிர்ந்து கொள்வோம். அவர்களின் படிவமும் உங்களுடன் பகிரப்படும்.

ஒரு தீர்வை ஏற்றுக்கொள்ள நாங்கள் உங்களுக்கு உதவ முயற்சிப்போம்.

இது தீர்வை அளிக்கவில்லை என்றால், உங்களுக்கான முடிவைத் தீர்மானிக்கும்படி எங்களைக் கேட்கலாம். இது நீதிமன்றத்தில் விசாரணை செய்வது போன்றது. எங்கள் முடிவு சட்டப்படி கட்டுப்படுத்தும்

## உங்கள் மொழியில் உதவி

எங்களை அழைக்க நீங்கள் Translating and Interpreting Service (TIS) பயன்படுத்தலாம்.

Interpreter

**131 450**

ஐ அழைக்கவும். இது ஓர் இலவச சேவை.

இயக்குபவரிடம் சொல்லுங்கள்:

- உங்கள் மொழி — அதனால் அவர்கள் உங்களை உரைபெயர்ப்பாளருடன் இணைக்க முடியும்
- எங்கள் பெயர் — Fair Work Commission (நியாயமான வேலை ஆணையம்)
- எங்கள் தொலைபேசி எண் - 1300 799 675

நீங்கள் ஒரு சந்திப்பில் அல்லது விசாரணையில் பங்கேற்க வேண்டுமானால், நாங்கள் உரைபெயர்ப்பாளர் ஒருவரை ஏற்பாடு செய்யலாம்.

## இலவச சட்டம் சார்ந்த ஆலோசனை

என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்க உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், எங்களிடம் ஊழியர்கள் மற்றும் சிறு வணிகங்களுக்கான இலவச சட்டம் சார்ந்த சேவை உள்ளது. எங்கள் இணையதளத்தில் 'Workplace Advice Service' பார்க்கவும்.

வேலையில் நியாயமற்ற பணிநீக்கம், பாகுபாடு, அடாவடித்தனம் செய்தல், மற்றும் பாலியல் துன்புறுத்தல் ஆகியவற்றிற்கு இந்தச் சேவையால் உதவ முடியும்.